இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு
************

## ஊடக அறிக்கை

## இந்திய விஜயத்தின் பின்னர் நாடு திரும்பிய இலங்கை குழு

குஷிநகருக்கான முதலாவது சர்வதேச விமான சேவையின் மூலமாக பல்வேறு நகரங்களுக்கான வெற்றிகரமான இருநாள் விஜயத்தின் பின்னர் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்கள் தலைமையிலான பேராளர்கள் குழு 2021 ஒக்டோபர் 21 ஆம் திகதி இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளது. இலங்கையின் பிரசித்தமான விகாரைகள் மற்றும் பல்வேறு பிரிவுகளைச்சேர்ந்த கிட்டத்தட்ட 100 சிரேஸ்ட பௌத்த தேரர்கள், நான்கு இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளும் இப்பேராளர்கள் குழுவில் அங்கம் வகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2. இப்பேராளர்கள் குழுவினரை சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் 2021 ஒக்டோபர் 20 ஆம் திகதி புனித வப் போயா தினத்தில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து அனுப்பிவைத்தனர். அத்துடன் உத்தர பிரதேஷ் முதலமைச்சர் ஸ்ரீ யோகி ஆதித்யநாத், ஒன்றிய அமைச்சரவை அமைச்சர்களான ஸ்ரீ ஜோதிராதித்யா எம்.சிந்தியா, ஸ்ரீ கிரன் ரிஜ்ஜு, மற்றும் ஸ்ரீ ஜி கிஷான் ரெட்டி, துணை அமைச்சர்களான ஸ்ரீ அர்ஜுன் ராம் மேக்வால், ஸ்ரீமதி மீனாக்ஷி லேஹி ஆகியோரால் இப்பேராளர்கள் குழுவினர் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்கப்பட்டனர்.

3. 2021 அக்டோபர் இருபதாம் திகதி குஷிநகரில் நடைபெற்ற அபிதம்ம தின நிகழ்வுகளில் இலங்கை பிரதிநிதிகள் குழு கலந்து கொண்டிருந்தது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்த பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் தனது உரையில், இலங்கையில் புத்த பெருமானை வழிபட ஆரம்பித்தமை தொடர்பாக தந்தையான அசோகப் பேரரசருக்கு அறிவிப்பதற்காக அரஹத் மஹிந்த தேரர் வப் போயா தினத்தில் இந்தியாவுக்கு திரும்பி இருந்தமையை, நினைவூட்டியிருந்தார். அதுமட்டுமல்லாமல் இந்திய அரசியலமைப்புக்கான அகத்தூண்டுதலாக புத்தபெருமான் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். மேலும் இந்திய தேசியக்கொடியில் காணப்படுகின்ற தர்மச்சக்கரம் நாட்டிற்கு சிறப்பினை வழங்குவதாகவும்

பிரதமர் மோடி குறிப்பிட்டிருந்தார். அதேவேளை, இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட மிகச்சிறந்த பரிசாக புத்த மதம் அமைந்திருப்பதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இங்கு குறிப்பிட்டிருந்ததுடன் இலங்கைக்கு பௌத்தமதம் வருகை தந்த காலப்பகுதி முதல் இருநாடுகளுக்கும் இடையிலான மக்கள் தொடர்புகள் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

4. இந்நிகழ்வுக்கு பக்கநிகழ்வாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்கள் பிரதமர் மோடி அவர்களை சந்தித்திருந்தார். அத்துடன் புனித பகவத் கீதையின் சிங்கள தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புக்களுடனான மும்மொழியிலமைந்த நூல் தொகுதியின் முதலாவது பிரதியையும் அவர் கையளித்திருந்தார். பகவத் கீதையினை இவ்வாறு மொழிபெயர்த்து வெளியிட்ட சிறந்த முன்னெடுப்புக்காக இலங்கை பிரதமர் அதி மேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களை அமைச்சர் நாமல் ராஜபக்ச அவர்களுடனான சந்திப்பின்போது, பிரதமர் மோடி அவர்கள் பாராட்டியதுடன் தனது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியிருந்தார்.

5. பிரதமர் மோடியின் பாராளுமன்ற தேர்தல் தொகுதியான வாரணாசிக்கு செல்வதற்கு முன்னதாக குஷிநகரில் உள்ள பரிநிர்வாண தூபி மற்றும் ரமபார் தூபி ஆகியவற்றிற்கு இக்குழுவினர் ஒரே நாளில் பயணம் மேற்கொண்டிருந்தனர். அத்துடன் சாரநாத்திலுள்ள முலகந்த குடி விகாரையில் அவர்கள் புத்த பெருமானின் அருளிற்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். புனித கங்கை நதியில் இக்குழுவினர் ஒரு படகுப் பயணத்தை மேற்கொண்டு வாரணாசியில் (முன்னைய பனாரஸ்) அமைந்திருக்கும் படித்துறைக்கட்டுக்களையும் அவர்கள் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பம்சமாகும்.

6. இந்திய இலங்கை உறவுக்கு இருநாட்டு மக்கள் இடையிலான தொடர்புகளே மையத்தில் இருந்து வருகின்றன. பல்லாயிரமாண்டுகளாக இருநாடுகளினதும் மக்களிடையில் காணப்படும் கலாசாரம், மொழி மற்றும் ஆன்மீக ரீதியிலான இணைப்புக்கள் மிகவும் வலுவான பிணைப்புக்களாக இருந்து வருகின்றன. இந்நிலையில் நூற்றாண்டுகள் பழமையான இந்த உறவின் தற்போதைய விஞ்ஞாபனமாகவும் இந்த சகல உறவுகளையும் புதிய மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு மிகவும் முக்கியமான ஒரு படிக்கற்களாகவும் குஷிநகருக்கான முதலாவது விமானசேவை அமைகிறது.

******

கொழும்பு
22 ஒக்டோபர் 21